தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 பிப்ரவரி 20, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடையளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

மின்மாற்றி

***49596—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், பருத்திபுத்தூர் ஊராட்சி, பருத்திபுத்தூரிலுள்ள அருந்ததியர் காலனிக்கு தனியாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், பருத்திபுத்தூர் ஊராட்சி, பருத்திபுத்தூர் அருந்ததியர் காலனிக்கு பருத்திபுத்தூர் SS No. IV *100* KVA *மின்மாற்றி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. அந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின்பளு 92 கிலோ வாட் ஆகும். இந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின்பளு அதிகம் என்ற காரணத்தினால் 21–4–2015 அன்று தனியாக பருத்திபுத்தூர் காலனிக்கு அருகிலுள்ள முசலம்குலம் கிராமத்தில் புதிய 100* KVA *திறன் கொண்ட பருத்திபுத்தூர்* SS No. IX *மின்மாற்றி நிறுவப்பட்டு பருத்திபுத்தூர் அருந்ததியர் காலனிக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் உறைவிடம், ஆற்றலின் பிறப்பிடம், ஈரோட்டு விடிவெள்ளியின் துணிவு, காஞ்சித் தென்றலாம் பேரறிஞர் அண்ணாவின் அறிவு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஈகை இவை ஒருசேர தன்னகத்தே கொண்ட தென்னகத்து ஜான்சிராணி, இந்தியாவிலேயே தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டிய உலகத் தமிழினத்தின் ஒரே தலைவி, அகவை 68–ல் அடியெடுத்து வைக்கும் உலகத் தமிழ் மக்களின் உயிர் மூச்சு மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களை வாழ்த்த எனக்கு வயதில்லை. அம்மா! தங்களின் மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். உலகம் போற்றும் உன்னதத் திட்டங்கள் தந்ததால் வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலிலே 234 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடி (மேசையைத்*

TRUTH ALONE TRIUMPHS

தட்டும் ஒலி) இன்றுபோல் என்றும் உலகம் போற்றும் நல்லாட்சி தொடரப்போகும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து மீண்டும், மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதியில் 500 ஆண்டுகளானாலும் செய்ய முடியாத மின் திட்டங்கள் இந்த ஐந்தே ஆண்டுகளில் செய்யப்பட்டுள்ளன. 10 கோடியில் அரக்கோணம் நகருக்கு தனியே ஒரு துணை மின் நிலையம், 12 கோடியில் இச்சிபுத்தூரிலே ஒரு துணை மின் நிலையம், 14 கோடியில் 33 KVA புன்னை துணை மின் நிலையத்தை 110 KVA-ஆகத் தரமுயர்த்தியது, நாகவேட்டிலே ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைக்க உத்தரவு வழங்கியது என இந்த 5 ஆண்டுகளில் அடுக்கடுக்கான மின் திட்டங்களைத் தந்து, அரக்கோணத்தையே ஒளியால் மிளிரச் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட பருத்திபுத்தூர் தாழ்த்தப்பட்ட அருந்ததியின மக்கள் வசிக்கும் பகுதிக்குத் தனியாக ஒரு மின்மாற்றி வேண்டுமென்று வினா கொடுத்து, அந்த விடை அவைக்கு வருவதற்குள்ளே அந்தப் பகுதியிலே மின்மாற்றி அமைத்தது மட்டுமல்லாமல், அங்கே குடியிருந்த 21 குடிசை வீடுகளுக்கும் ஒரு விளக்கு இணைப்பு வழங்கி, அவர்களுடைய வீட்டுக்கு மட்டுமல்லாமல், கல்வியின்மூலம் அவர்களுடைய வாழ்க்கைக்கும் வெளிச்சம் ஏற்படுத்திய தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவியாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் அத்தாணி பகுதியில் 110/33 KVA துணை மின் நிலையம் அமைக்க ஆணை பிறப்பித்தும் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே,

பணியினை விரைவாகத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தியூர் தொகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பது சம்பந்தமான பணிகளை விரைவுபடுத்தவும், அது என்ன நிலையில் இருக்கிறது என்றும் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகளை எந்தளவிற்கு விரைவுபடுத்த முடியுமோ அந்தளவிற்கு விரைவுபடுத்தி, அந்தந்தப் பகுதிகளுக்கு விரைவாக துணை மின் நிலையங்கள் அமைத்திட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தியூர் பகுதியிலும் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். முந்தைய கூட்டத்தொடரின்போது காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில், துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், எப்போது பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதியில் உள்ளடங்கிய கண்ணங்குடி பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே நடைபெறுகின்ற பணிகளை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கூத்தப்பாடி ஊராட்சியில் கே. அக்ரகாரம் கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மின்மாற்றி பயன்பாட்டில் உள்ளது. இது தொடர்ந்து இத்தனை ஆண்டுகள் இருப்பதனால் அடிக்கடி பழுதடைந்துவிடுகிறது. கூடுதலாக, ஏராளமான மின் மோட்டார்களுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புதிதாக மின்மாற்றி அமைப்பதற்கும், வலுவுள்ள மின்சாரம் கிடைப்பதற்கான வகையிலே தரம் உயர்த்தித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் குறைவான தாழ்வழுத்த மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார். அதை ஆய்வு செய்து, ஏதாவது குறையிருப்பின் அதை நிவர்த்தி செய்வதற்கு, உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*